

முனைவர் பெ.சுமதி
மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில், ஒப்பிலக்கியத்துறையில், உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். ஆய்வியல் நிறைஞர் பட்டம் மற்றும் முனைவர் பட்டத்தை மதுரை காமராசர் பல்கழைக்கழகத்தில் பெற்றவர்.

ஒப்பிலக்கியம், இக்கால இலக்கியம், சங்க இலக்கியம் தொடர்பாக அறுபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஐந்து புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவரது வழிகாட்டுதலில் எட்டு மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வருகின்றார்கள். இருபது மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றிருக்கின்றார்கள். பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கை (கோட்பாட்டுப் பார்வையில் - தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் காளிதாசாரின் படைப்புகளும்) நடத்தியுள்ளார். இந்நூல் இவரது ஆறாவது நூலாகும்.

காவ்யா

ISBN 978-93-83632-99-2

காவ்யா

# சங்க இலக்கியம்
# காதா சப்தசதியில் பருந்திணைக் கோட்பாடுகள்
## ஒப்பியல் நோக்கு

முனைவர் பெ.சுமதி

சங்க இலக்கியம் - காதா சப்தசதியில்
பெருந்திணைக் கோட்பாடுகள்
(ஒப்பியல் நோக்கு)
முனைவர் பெ. சுமதி
முதல் பதிப்பு: மே, 2016
வெளியீடு: காவ்யா
16, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
போன்: 044 - 23726882/9840480232
அச்சாக்கம்: சாய்ஸ்ரீ எண்டர்பிரைசஸ், சென்னை - 14.
பக்கங்கள்: X+150= 160
விலை: ரு.160/-

Sanga Illakkiyam - Kaatha Sabthasathiyil Perunthinaik Kotpadukal
(Oppiyal Nokku)
Dr. P. Sumathi
First Edition : May, 2016
Published by KAAVYA
16, 2nd Cross Street, Trustpuram,
Kodambakkam, Chennai - 600 024.
Phone: 044 - 23726882 / 9840480232
e-mail : kaavyabooks@gmail.com.
Website : www.kaavyaa.com.
Printed at : Sai Sri Enterprises, Chennai -14.
Pages: X+150= 160
Price : ₹ 160



# முன்னுரை

ஒரு மொழியின் சிறப்பை அறிவதற்கு அதை மற்றொரு மொழியுடன் ஒப்பிட வேண்டும். அவ்வாறு ஒப்பிடப்படும் போது மட்டுமே ஒவ்வொரு மொழியின் தனிச்சிறப்பையும் கண்டறிய முடியும். ஒப்பிடக்கூடியவை எதுவாக இருந்தாலும் அதற்குள் ஒற்றமைக் கூறுகள் பெரும்பான்மை இருந்தால் மட்டுமே ஒப்பிலக்கிய ஆய்வு சிறக்கும். அந்த வகையில் உலகச் செம்மொழிகளின் வரிசையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கும் சங்க இலக்கியத்திற்கு அதற்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பு உண்டு. அதற்குக் காரணம் ‘சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்’ என்பதாகும். சங்க அக இலக்கியங்கள் இயற் பெயர் சுட்டப் பெறாமல் தலைவன், தலைவி என்ற பொதுப் பெயரால் மட்டுமே அழைக்கப்படுகின்றன. திணைத் துறைப் பகுப்பு என்பதும் மற்ற மொழிகளுக்கு இல்லாத சங்க இலக்கியத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

இந்தச் சிறப்பு ஆந்திர நாட்டு அக இலக்கியம் என போற்றப்படும் காதா சப்தசதிக்கும் உண்டு. காரணம் காதா சப்தசதியிலும் பெயர் குறிப்பிடாமல் தலைவன், தலைவி என்று பொதுப் பெயரால் அழைக்கும் கட்டமைப்புக் காணப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் காணப்படும் திணை, துறைப் பகுப்பு காதா சப்தசதியில் இல்லை. ஆனால் ‘சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறஅர்’ என்ற சங்க அக இலக்கிய மரபு போன்று காணப்படுகின்றது. அதனால் சங்க இலக்கியத்துடன் காதா சப்தசதியை ஒப்பிட்டு ஆய்வது இன்றியமையாததாகின்றது.

‘சங்க இலக்கியம் - காதா சப்தசதி காட்டும் தோழியின் மனிதநேய மாண்புகள்’ என்ற தலைப்பில், மனித நேயம் என்பது இன்று மக்களிடம் கேள்விக்குரியவையாக உள்ளது. இன்றைய சூழ்நிலையில் ஒருவன் மனித நேயத்தோடு நடந்து கொண்டால் சமுதாயம் அவனுக்கு மனநிலை சரியில்லாதவன் என்று பெயர் வைத்தாலும் வைக்கும் என்ற அச்சம் தோன்றுகின்றது. காரணம் பல வருடங்கள் தான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் யார் இருக்கின்றார்கள் என்று தெரியாமல் வாழ்வது தான் வாழ்க்கையின் கௌரவமாகக் கருதக்கூடிய அடுக்கு மாடிக் குடியிருப்பில் வாழ்கின்ற மனிதர்களைக் கொண்ட சமுதாயமாக நம் சமுதாயம் இன்று மாறி வருகின்றது. கிராமப்புறங்களில் இன்று மனிதநேயம் தொற்றிக்